(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 40.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 மார்ச் 14, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

126/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.01.01 ஆம் திகதி தொடக்கம் 2024.09.21 ஆம் திகதி வரை சர்வதேச நாணய நிதியத்திலிருந்து இலங்கை பெற்றுக்கொண்டுள்ள மொத்தக் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) 2024.09.21 ஆம் திகதி தொடக்கம் தற்போது வரை சர்வதேச நாணய நிதியத்திலிருந்து இலங்கை பெற்றுக்கொண்டுள்ள மொத்தக் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன் தொகை எத்தனை சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) மேற்படி கடன்தொகைகள் பெறப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(v) மேற்படி கடன்தொகைகளுக்காக அறவிடப்படும் வட்டி விகிதம் யாதென்பதையும்;

(vi) மேற்படி கடன் தவணைகளை திருப்பிச் செலுத்த ஆரம்பிக்க வேண்டிய திகதி மற்றும் செலுத்தி முடிக்கப்பட வேண்டிய திகதி வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

155/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— வலு சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காற்றாலை மின் சக்தியையும் சூரிய மின் சக்தியையும் அதிகரிப்பதற்காக இந்தியாவின் அதானி நிறுவனத்துடன் அல்லது அதன் துணை நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் உடன்படிக்கை நிறைவேற்றி உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உடன்படிக்கையைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அவ் உடன்படிக்கையின் அடிப்படை நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iv) போட்டிநிலை விலைமனுக் கோரலின்றி எந்த அடிப்படையில் மேற்படி நிறுவனத்திற்கு இலங்கையில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது என்பதையும்;

(v) இலங்கை மின்சாரச் சட்டத்திற்கு இணங்க "ஓர் அரசாங்கத்திற்கும் மற்றுமொரு அரசாங்கத்திற்கும் இடையில்" (Government to Government) என்ற வரையறைக்குள் மேற்படி கம்பனி உள்ளடங்காது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vi) மேற்படி உடன்படிக்கை குறித்து அரசாங்கத்தின் கொள்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

190/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின் கட்டணத்தைத் திருத்துவதாக அரசாங்கம் பல சந்தர்ப்பங்களில் அறிவித்தமை பற்றி அவர் அறிவாரா என்பதையும்;

(ii) இறுதியாக மின் கட்டணம் திருத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) எதிர்காலத்தில் மின் கட்டணம் திருத்தப்படுமாயின், அது தொடர்பிலான விபரங்கள் யாவை என்பதையும்;

(iv) மின் கட்டணத்தை திருத்துவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு இலங்கை மின்சார சபை நீண்ட காலத்தை எடுத்துக்கொள்வதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் தெரிவிக்கப்படுகின்ற கூற்று தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) மின் கட்டணத்தை மேலும் திருத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

293/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 நவம்பர் மாதம் இலங்கையில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக கல்முனை, அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக்கூடம், தீவிர சிகிச்சைப் பிரிவு, நோயாளர் தங்கும் அறைகள், வெளி நோயாளர் பிரிவு, சாய்சாலைகள், மருந்துக் களஞ்சியங்கள் உட்பட வைத்தியசாலை வளாகம் முற்றாக நீரில் மூழ்கியது என்பதையும்;

(ii) அதன் காரணமாக மேற்படி வைத்தியசாலையின் நடவடிக்கைகள் செயலிழந்தன என்பதையும்;

(iii) நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலை வளாகத்தை மென்மேலும் பாதுகாப்பாக பேணிவர வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலை நீரில் மூழ்கியதன் காரணமாக ஏற்பட்டுள்ள சேதம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சேதம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி சேதத்தை வழமைக்குக் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமை ஏற்படாதிருப்பதற்கு மற்றும் வைத்தியசாலை வளாகத்தை மென்மேலும் பாதுகாப்பாக பேணிவருவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

302/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வருடாந்தம் அரசாங்க மற்றும் தனியார் பாடசாலைகளில் முதலாம் வகுப்பிற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட (i) இக்கு அமைவாக கடந்த ஐந்து ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கடந்த மூன்று ஆண்டுகளில் க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகளுக்குத் தோற்றிய மற்றும் சித்தியடைந்த பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேலே குறிப்பிடப்பட்ட க.பொ.த (உ/த) பரீட்சார்த்திகளில் சித்தியடைந்து அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கு தகுதிபெற்று அனுமதி கிடைக்கப்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறிவிப்பாரா?

(ஆ) (i) பல்கலைக்கழக அனுமதிக்காக தகுதிபெற்றிருந்தும் பல்கலைக்கழகங்களுக்குள் அனுமதி கிடைக்கப்பெறாத மாணவர்களுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாதென்பதையும்;

(ii) இலங்கையிலுள்ள தனியார் பல்கலைக்கழகங்களில் பதிவுசெய்துகொண்ட அத்தகைய மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) உயர் கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையுடன், கடந்த ஐந்து வருடங்களில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்விகற்கும் மாணவர்களுக்காக மதிப்பிடப்பட்ட வருடாந்தச் செலவினை இலங்கை ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் யாதென்பதை வெவ்வேறாகவும்;

(iv) கடந்த ஐந்து வருடங்களில் கல்விக்கான மொத்த ஒதுக்கீட்டுத் தொகை மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் சதவீதம் யாதென்பதை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ 1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட இருபதாவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, மார்ச் 12).

*2.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— எல்கடுவ பெருந்தோட்டக் கம்பெனியின் வருடாந்த அறிக்கைகள் (2012, 2013, 2014, 2015, 2016, மற்றும் 2017),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் கீழ் 2023.11.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட முறையே, 2012.12.31, 2013.12.31, 2014.12.31, 2015.12.31, 2016.12.31 மற்றும் 2017.12.31 ஆம் திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய எல்கடுவ பெருந்தோட்டக் கம்பெனியின் 2012, 2013, 2014, 2015, 2016, மற்றும் 2017ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*3.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2017),— 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் 2023.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*4.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2018),— 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் 2023.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*5.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் 2023.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*6.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் 2024.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*7.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர், — களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பெனி லிமிரெட்டின் வருடாந்த அறிக்கை (2020/2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.08.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.03.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பெனி லிமிரெட்டின் 2020/2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*8.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சி நிறுவனச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் 2024.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*9.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சி நிறுவனச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் 2024.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*10.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2022),— 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*11.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபையின் வருடாந்த அறிக்கை (2022),— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேயிலைச் சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*12.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத் துறைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் 2023.09.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.06.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.08.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*13.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2021),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத் துறைச் சட்டத்தின் 20(2) ஆம் பிரிவின் கீழ் 2024.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.06.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.08.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*14.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத் துறைச் சட்டத்தின் 23(4) ஆம் பிரிவின் கீழ் 2024.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.06.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.08.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*15.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத் துறைச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் கீழ் 2024.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.06.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.08.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*16.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத் துறைச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் கீழ் 2024.05.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.06.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.08.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*17.

புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— காலி மரபுரிமை மன்றத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 1994 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்றச் சட்டத்தின் III ஆம் பகுதியின் 16 ஆம் பிரிவின் கீழ் 2023.12.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய காலி மரபுரிமை மன்றத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.07.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.09.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*18.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, தேசிய இளைஞர் சேவைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் 2023.10.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.07.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.09.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*19.

வலுசக்தி அமைச்சர்,— இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 1987 இன் 23 ஆம் இலக்க, அரச கூட்டுத்தாபனமாகவோ அல்லது அரசுடமை வியாபாரமாகவோ பொதுக் கம்பெனியாக மாற்றுதல் சட்டத்தின் 2(I) ஆம் பிரிவின் பிரகாரம், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 2023.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*20.

வலுசக்தி அமைச்சர்,— இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 1987 இன் 23 ஆம் இலக்க, அரச கூட்டுத்தாபனமாகவோ அல்லது அரசுடமை வியாபாரமாகவோ பொதுக் கம்பெனியாக மாற்றுதல் சட்டத்தின் 2(I) ஆம் பிரிவின் பிரகாரம், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 2024.03.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*21.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 நவம்பர் 22 ஆம் திகதிய 2411/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 75 (1) பிரிவின் கீழ் இரட்டை வரி விதிப்பினை தவிர்ப்பதற்காக மற்றும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனை தடுப்பது தொடர்பில் 2013 யூலை 26 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு, 2013 செப்டெம்பர் 17 ஆம் திகதிய இலக்கம் 1828/9 கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் இந்தியக் குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை திருத்தப்பட்டு, 2024 டிசெம்பர் 16 ஆம் திகதியன்று செய்துகொள்ளப்பட்டதும் 2025.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கூட்டிணைந்த பத்திரம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 16 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 112 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2024 டிசம்பர் 22 ஆம் திகதிய 2415/79 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 சனவரி 27 ஆம் திகதிய 2421/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 சனவரி 31 ஆம் திகதிய 2421/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் மதுபானங்கள் மீதான மதுவரித் தீர்வை தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 சனவரி 10 ஆம் திகதிய 2418/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 01/2025)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தித் தீர்வை தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2025 சனவரி 10 ஆம் திகதிய 2418/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

"ஒதுக்கீடு" எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படுகின்ற திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.

---